# ஸ்ரீ தியாகராஜ ஸங்கீத வித்யாலயம்

துவக்கம் : 1980

21/1, பிராமணத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.

## G.N. தேசிகன் - ஓர் அறிமுகம்

"சிவந்த நிறம், யாரையும் பார்த்த மாத்திரத்தில் எடைபோடும் கண்கள், சுறுசுறுப்பான நடை, இரு தோள்களையும் இணைத்திருக்கும் மேல் துண்டு, மின்னும் ஜிப்பா, கரைபடாத கரைவேட்டி, கையில் ஓர் வெண்கொற்றக் குடை, தெரிந்தவர் கண்ணில் பட்டால் "என்ன, எப்படியிருக்க" என்ற நம்மை விசாரிக்கும் போதே உள்ளுணர்வை தொட்டுப்பார்க்கும் அன்பு" யார் இது போல் அமைவார் - திரு. G.N. தேசிகனைத் தவிர"

1980களில் தொடங்கப்பட்ட ஸ்ரீ தியாகராஜ சங்கீத வித்யாலயத்தின் முதல் மாணவன் என்ற அங்கீகாரத்தில், பெருமிதமும், மகிழ்ச்சியும் பொங்க இந்த மாபெரும் விழாவை ஒருங்கிணைப்பதை இறைவன் அளித்த பேறாகக் கருதுகிறேன்.என்னுடன் இணைந்து, திரு. G.N. தேசிகன் அவர்களின் மருமகள் திருமதி. லட்சுமி நரசிம்மன் அவர்களும் இந்நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பார்.

உலக வரலாற்றில், முதன் முறையாக, மிகப் பாரம்பரியமிக்க கர்நாடக சங்கீத உலகில், நான்கு முக்கியமான நிகழ்வுகள் இந்நாளில் நடைபெற உள்ளன. திரு. G.N. தேசிகன் என்னும் சங்கீத மேதையால் விதைக்கப்பட்ட ஸ்ரீ தியாகராஜ சங்கீத வித்யாலயம் ஆலமரமாய் தழைத்து, எண்ணற்ற இசை மேதைகள் எனும் விழுதுகளை உருவாக்கி, பல கிளைகளை உலகெங்கும் பரப்பி, இன்று இசை பயிலும் மாணவர்களை எதிர்கால இசை மேதைகளாய் உருவாக்க நிழல் தந்து உயர்ந்து நிற்கும் வித்யாலயத்தின் 25ம் ஆண்டுவிழா. என்றும் எண்ணத்திலும், வண்ணத்திலும் 16ஆய்விளங்கும் திரு. G.N. தேசிகன் அவர்களின் 75வது பிறந்த நாள் விழா. தொப்புள் கொடி அறுத்து, கர்ப்பப்பையை விட்டு வெளிவரும்பொழுதில், அழுத போதும் தாளத்தோடு அழத் தொடங்கிய நாள் முதல் எண்ணற்ற இசைப்பணி புரிந்துள்ள அவரது 50வருட கலைச்சேவைக்கான பாராட்டுவிழா. அது மட்டுமா? ருக்மணி என்ற மங்கையின் கரம்பற்றி, நன் மக்கள் ஈன்று, தன் இசை தன்னோடு நிற்காமல், தன் பாரம்பரியத்திற்கும் அதனை பரப்பி, ஒரு சிறந்த குடும்பத்தலைவராகவும் பரிமளித்து தனது 50 வது திருமண நாளைக் கொண்டாடும் ஓர் விழா. ஆகையினால் பெருமக்களே, இது ஒரு ஆலமர வேருக்கு நாம் நடத்தும் பாத பூஜை. மாணவர்களாய் ஓர் நல்லாசிரியருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடன். இவ்விழா இவருக்கு நாம் செய்யும் மரியாதை என்பதை விட, இசைக்கு நாம் செய்யும் மரியாதை.

### ஓர் அறிமுகம்

இவர் 1930ம் வருடம் அக்டோபர் மாதம் 9ம் நாள் திரு. N.A. வரதாச்சாரி மற்றும் திருமதி. ராஜலட்சுமி தம்பதியினருக்கு மகனாய் அவதரித்தார். "என் தாயே இசையின் உரு. நீங்கள்தான் என் குரு" என தாயைப் பணிந்து, தனது நான்காவது வயதிலேயே தன் தாயிடமே கர்நாடக சங்கீதத்தை பயிலத் துவங்கினார். கர்நாடக சங்கீத மேதை கான கலாதர மதுரை மணி அய்யரின் சீடரான சங்கீத வித்வான் திரு. சேதுராம ஐயரிடம் சுமார் 17வருடம் குருகுல வாசமாக இசை பயின்றார்.

முதல் இசை அரங்கேற்றம் ஸ்ரீ தியாகராஜ வித்வத் சமாஜம் என்னும் உயர்ந்த அமைப்பில் மார்ச் மாதம் 1955ம் வருடம் தவழ்ந்தது. புது இசை மண்ணில் பிறந்தது. விண்மீன்களை எண்ணி விடை சொன்னவர் யார்? ஆம். அன்று தொடங்கி, இன்று வரை, சுமார் 2000க்கும் மேல் எண்ணிலடங்கா இசைக் கச்சேரிகளை, உலகெங்கும், தலைசிறந்த வயலின் மற்றும் மிருதங்க வித்வான்களின் துணையோடு நிகழ்த்தி வருகிறார். அவர்கள் இவருக்கும் பக்க வாத்தியங்கள்

அல்ல. இவரின் பக்க பலங்கள். 1948ம் வருடம் ICI India Ltd என்ற நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்து, 1985ம் வருடம் உயர்ந்த பொறுப்புகள் பல வகித்து பணி விடை பெற்றார். இயற்கை ஓய்வு பெற்றால், இவ்வுலகம் தாங்குமா? இசைப் பணி இவருக்கு இறைப்பணி. ஆகையால், அலுவலகப்பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும், இசைப்பணியில் ஓய்வின்றி உழைக்கிறார்.

## வாழ்நாள் சாதனைகள்

* சமீபத்தில், தனது 2000மாவது இசைக் கச்சேரியை விசாகப்பட்டினத்தில் இயங்கி வரும், விசாகா இசை மற்றும் நடன அமைப்பில் 2004 ஜூலை 30ம் தேதி நிகழ்த்தியபோது, மார்ச் மாதம் 1955ம் வருடம் துவங்கி இன்றுவரை 2000க்கும் மேற்பட்ட பல கர்நாடக இசைக் கச்சேரிகளை நிகழ்த்தியுள்ளார்.

* அகில இந்திய வானொலியில் 1968 முதல் இவர் இசையொலி கேட்கத் துவங்கியது. அனைத்து இந்தியத் தொலைக்காட்சிகள், மற்றும் தனியார் தொலைக்காட்சிகளிலும் இவரின் இசை ஆட்சி நடந்தேறியது.

* உலகெங்கிலுமுள்ள அனைத்து கர்நாடக சபைகளிலும், இசைத் துறையைச் சேர்ந்த அமைப்புகளிலும், தலைசிறந்த வித்வான்களின் துணையோடு இசைதனை காற்றில் பரவ விட்டுள்ளார்.

* இயலும் இவருக்கு இசையும். இசை அமைப்புகள் பலவற்றில் பயிலும் மாணவர்களுக்கு கர்நாடக இசை பற்றிய சிறப்பு உரைகளை நிகழ்த்தி அவர்களை உற்சாகப்படுத்தியுள்ளார்.

* இசை என்பது இறைவன் அளித்த வரம். அதற்கு இவர் இட்டார் புது உரம். ஆம். கர்நாடக இசை என்பது தனிப்பட்ட மக்களின் சொத்தாக இருந்த நிலையை மாற்றி, ஏழை எளிய மற்றும் அனைத்து தரப்பு மக்களும் கர்நாடக இசையின் மகத்துவத்தை அறிந்துகொள்ள மிகக் குறைந்த கட்டணத்தை வசூலித்து, அத்தொகையையும் கர்நாடக இசைக்கே செலவழித்து, கர்நாடக இசை உலகமெங்கும் பரவ 1980ல் தியாகராஜ ஸங்கீத வித்யாலயம் என்ற அமைப்பை நிறுவி, இன்றுவரை எண்ணற்ற மாணவர்களை உருவாக்கி வருகிறார்.

* இசை மேதைகளுக்கு தரப்படும் அங்கீகாரம் இசைக்கு செய்யப்படும் அலங்காரம். இந்த உயரிய எண்ணத்தில், ஒவ்வோர் ஆண்டும் தியாகராஜ சங்கீத வித்யாலயத்தின் ஆண்டுவிழாவில் தலைசிறந்த கர்நாடக மேதைகளை தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கி கௌரவித்து வருகிறார்.

* இவரிடம் இதுவரை 2200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கர்நாடக இசை பயின்று வந்துள்ளனர். அவர்களையும் கர்நாடக இசைக்கச்சேரிகள் நடத்தி புகழ் பெற ஊக்குவித்து வருகிறார். நேற்றைய

* இவரிடம் பயின்ற மாணவர்கள் பல்வேறு அமைப்புகள் நடத்திவரும் போட்டிகளில் பரிசுகளை வென்று வருவது மட்டுமின்றி, அகில இந்திய வானொலி மற்றும் தனியார், மற்றும் சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று வெற்றி பெறுவது பாராட்டிற்குரியது.

* விருதுகள் இவரை நாடி வந்தன. சங்கீத ரத்னம், சங்கீத பூஷனா உள்ளிட்ட பல உயரிய விருதுகள் இவரது கிரீடத்தில் ஒளி வீசும் கற்கள்.

* காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான சங்கீத வித்வான் விருது இசையில் இவர் புரிந்த பணிக்கு ஒரு பதம்.

* இசையில் தடம் பதித்த இவருக்கு, ஸ்ரீரங்க மடம் இவருக்கு காயக கலாநிதி என்ற உயரிய விருதை இந்த வருடம் வழங்கி சிறப்பித்தது.

* சைதையைத் தவிர, இவரது மற்றொரு கிளையை ஜாபர்கான் பேட்டையிலும் பரப்பியிருக்கிறார்.

இசையின் அடையாளமாய் விளங்கிய தனது குருவுக்கே குருவாக விளங்கிய கான கலாதர மதுரை மணி அய்யருக்கு நன்றி செலுத்தும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் மதுரை மணி அய்யர் தினத்தையும், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜ ஸ்வாமிகள் தினத்தையும், தனது தியாகராஜ சங்கீத வித்யாலயத்தின் ஆண்டுவிழாவோடு இணைத்து கொண்டாடி வருகிறார்.

## பெற்ற விருதுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸங்கீத ரத்னம் | புவனேஸ்வரி பீடம், அம்பத்தூர் | 1973 |
| 2. | ஸங்கீத பூஷனா | துளசிவனம் ஸங்கீத பரிஷத் திருவனந்தபுரம் | 1983 |
| 3. | சிறந்த கர்நாடக மேதை | இந்தியான் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி தி.நகர், சென்னை | 1987 |
| 4. | கானாம்ருத சுரபி | ஸ்ரீ வித்யாபீடம், கள்ளக்குறிச்சி | 1988 |
| 5. | சுகல்யா சங்கீதா | செம்பை கேரளா ஏகாதசி கலைஞர்கள் குழு | 1989 |
| 6. | சுஸ்வர சுக லய ஸங்கீதா | புரந்தரதாஸர் ஸ்ரீ தியாக பிரம்ம கலைஞர்கள் குழு, தாம்பரம் | 1989 |
| 7. | இசைச்செம்மல் | தெய்வீக இயல் இசை மன்றம், ஆதம்பாக்கம் | 1998 |
| 8. | ஆஸ்தான வித்வான் | காஞ்சி காமகோடி பீடம், காஞ்சிபுரம் | 2002 |
| 9. | டாக்டர் செம்மங்குடி ஸ்ரீநிவாசர் இசைச்செம்மல் விருது | பாரத் கலாச்சார், சென்னை | 2004 |
| 10. | இசைச் செம்மல் விருது | தியாகராஜ வித்வத் சமாஜத்தின் 75வது ஆண்டுவிழா குழு | 2004 |
| 11. | காயக கலாநிதி | ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமம், ஸ்ரீரங்கம் | 2005 |

## திரு. G.N. தேசிகன் அவர்களின் இசை தொடங்கும் முன் ....

இது அனைவரும் உணரும் முக்கிய காலம். ஞாலம் போற்றும் உன்னத மனிதரால் வெளிவரப் போகும் இசையின் ஜாலம்.

உங்கள் காலணிகளை வெளியே கழற்றும்போதே கவலைகளையும் கழற்றி உடன் வைத்து விடுங்கள்.

செவிகளை கூர்ப்பாக்கிக் கொள்ளுங்கள். 50 வருட இசையின் சாறு ஒரு மணி நேரத்தில் உங்கள் முன்னால்.

ஒரு குயில் மட்டும் இசைத்தாலே தலையாட்டி ரசிக்கும் நாம், ஓராயிரம் குயில்கள் ஒன்றாக இசைத்தால் என்ன செய்வோம்?

அமைதியாய் இருங்கள். இரு ஒரு பொழுது போக்கு அல்ல. போக்கும் பொழுதை பயனாய் ஆக்க நமக்கு கிடைத்த அரியதோர் வாய்ப்பு. அவரவர் இருக்கையில் அவரவர் அமர இருகை கூப்பி வேண்டிக் கேட்கிறேன்.

இசையெனும் இந்த இமய மலையை அண்ணாந்து பார்க்கும் அறுகதைகூட எங்களுக்கில்லை.

காயக கலாநிதி அவர்களே, இசைத் தேரிலே நீங்கள் ஏறுங்கள். வடம் பிடிக்க நாங்கள் தயார்.

வாழ்வின் அர்த்தம் புரிந்து வாழும் மனிதரை, எழுந்து நின்று, வரவேற்போம் வாருங்கள்.